1974 மார்ச் 12]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கார்ப்பரேஷன் எப்போது துவங்கப்பட்டது? நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகிறது? தற்போது லாபத்தில் இயங்குகிறதா? எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது? என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அது தொடங்கிய தேதி விவரம் கைவசம் இல்லை. ஆனுல், கணக்கு அடிக்கடி வந்துக்கொண்டிருக்கிறது. முதலாண்டு லாப நட்டக் கணக்கு இன்னும் வந்து சேரவில்லை.

மேட்டுப்பாளையம் நகரமன்றக் கட்டிடம்.

*387 வினு—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகர மன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றம், ரூ. 4,43,000 மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொள்ளத் தீர்மானித்து, அக்கட்டிட வேலையைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்க அரசின் அனுமதியை வேண்டியது.

நகாராட்சி மன்றங்களின் கட்டிட வேலைகளை எடுத்துச் செய்ய, பொதுப் பணித்துறை உள்ளபோது அவ்வேலைகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் எடுத்துச் செய்ய அனுமதிப்பது சரியாகாது என்று அரசு கருதியதால் மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகவே, கட்டிடம் அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலேயே சொந்தக் கட்டிடம் இல்லாத நகராட்சி மேட்டுப்பாளையம் நகராட்சி ஒன்றுதான். அதற்காக கால்கோள் விழா நடைபெற்று ஆண்டு பலவாகிறது. இந்த ஆண்டிலாவது அதற்குப் புதிய கட்டிடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்ட அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனுல் கட்டுவது யார் என்பதிலேதான் விவகாரம் இருக்கிறது. மீண்டும் அதைப் பரிசீலனை செய்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உடனடியாக அனுப்பப்பட்டால் இந்த ஆண்டே அந்த வேலையை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.